come forward to auction the routes and give them to the highest bidder provided they stick to the regulation of not charging more than the maximum rate per mile fixed by the Government?

THE HON. SRI V. RAMAIAH : The two suggestions given by the hon. Member will not solve the present difficulties because there is keen competetion from every section of the people. Government are constantly reviewing the situation to find out what steps should be taken to minimise the difficulties which are experienced at present.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்தப் பஸ் ரூட்டுகளைப் பெறுவதற்கு பஞ்சாயத்து போர்டு எத்தனை தீர்மானங்கள் போட்டாலும் பர்மிட் கிடைப்பதுபெரும் முதலாளிகள் குறுக்கிட்டால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்தப் பெரிய பஸ் கம்பெனிகளின் உரிமையாளர்கள் தங்கள் லாபத்தைக் கருதி மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் சிறு பஸ் ரூட்டுகளைத் தடை செய்கிறார்கள். ஆகவே இந்த பஸ் சர்வீசை சர்க்காரே ஏற்று நடத்த முன் வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : அதிகப்படியாக பஸ் ரூட்டுகளைத் திறப்பதற்கும் அரசாங்கமே பஸ் ரூட்டுகளை ஏற்று நடத்துவதற்கும் சம்பந்தமே இல்லை. அதிகப்படியாக பஸ் ரூட்டுகளை அரசாங்கம் ஏற்படுத்த முன்வருவதைத் தடுப்பதற்குக் கூட எவ்வளவோ முயற்சிகள் நடக்கின்றன. அதைக் காட்டிலும் அதிகப்படியான முயற்சியுடன் பஸ் ரூட்களைத் திறப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது. நமது மாகாணத்தைப் பொருத்தவரை போக்குவரத்து வசதி நல்ல முறையில் இருந்தாலும் இன்னும் அதிகப்படுத்த வேண்டியது அவசியம்தான். அதை எதிர்ப்பவர்கள் இருக்கின்றார்களே என்று பார்க்கும்போது உண்மையில் நானே வருத்தமடைகிறேன்.

SRI D. S. AUTHIMOOLAM : நாம் சோஷலிஸ பாணி சர்க்கார் என்று சொல்லிக் கொள்வதால், 50 பஸ் பர்மிட்டுகளுக்கு மேல் ஒரு கம்பெனிக்குக் கொடுக்கக் கூடாது என்று விதியைத் திருத்த சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : பஸ் போக்குவரத்தைப் பொறுத்தவரை அது நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம். உச்ச வரம்பை நிர்ணயிப்பது பற்றிப் பரிசீலனை செய்கிறேன்.

SRI A. GOVINDASAMY : இப்பொழுது "ட்ரெயின்கள்" எல்லாம் காலாகாலத்தில் வராத காரணத்தினால் பல எக்ஸ்பிரஸ் பஸ்களை விட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : பஸ் போக்குவரத்தைப் பொருத்வரை எல்லா பஸ்களும் காலாகாலத்தில் வந்து கொண்டிருக்கின்றன. அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு வருகிறோம். ரயில் போக்குவரத்தை ஈடு செய்யும்படி அதிகமாக பஸ் விட வேண்டுமென்று பரிசீலனை செய்து மக்களுக்குச் சிரமம் இல்லாத முறையில் பஸ்களை அதிகப்படுத்திக் கொண்டு வருகிறோம்.

Fishermen Co-operative Societies in the Nanguneri taluk

* 92 *Q*.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Fishermen Co-operative Societies in the Nanguneri taluk of the Tirunelveli district are brought under the Assistant Director of Fisheries, Kanyakumari district;

7th February 1959]

(*b*) if so, the reasons therefor;

(*c*) whether any petitions have been received for their inclusion under the Assistant Director of Fisheries, Tuticorin, as before; and

(*d*) if so, the action taken on them?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes.

(*b*) The work of the Assistant Director of Fisheries, Tuticorin has increased greatly on account of the Pearl and Chank Fisheries in Tuticorin. Consequently it was too difficult for him to effect any proper supervision over the activities in the fishing villages of Nanguneri taluk which are very distant from Tuticorin. On the other hand the jurisdiction of the Assistant Director of Fisheries, Nagercoil, was much smaller and some equalization was considered necessary. The Fishery work in Nanguneri taluk was therefore ordered to be brought under the Assistant Director of Fisheries, Kanyakumari District at Nagercoil to serve the best interests of fishermen of Nanguneri taluk.

(*c*) & (*d*) Sri C. Machado, President of Tirunelveli District Fishermen Co-operative Federation Limited, and Sri A. V. Thomas, M.L.A., addressed the Government for maintaining the status quo. The above position was explained to them.

SRI M. S. SELVARAJAN : ஸார், இதர இலாக்காக்களைப் போலவே மீனவர் நல இலாகாவும் ஜில்லா வாரியாகப் பிரிக்கப்படுகிறது. அந்த நிலையிலும் ஒரு தாலூகா மட்டும் துண்டிக்கப்பட்டு மற்றொரு ஜில்லாவுடன் இணைக்கப்படுகிறது. அதை தூத்துக்குடி அஸிஸ்டெண்ட் டைரக்டர் தலைமையின் கீழ் கொண்டுவர அரசாங்கம் மீண்டும் புனராலோசனை செய்யுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : ஜில்லாவாரியாக ஒவ்வொரு டைரக்டர்களை நியமித்தாலும், நாங்குநேரி கன்னியாகுமரியின் பக்கத்தில் இருப்பதால் மீனவர் வசதியைப் பொறுத்துத்தான் இந்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஜில்லாவைப் பிரிப்பதற்காகச் செய்யப்படவில்லை மேலும் தூத்துக்குடி டைரக்டருக்குக் கூடுதலான வேலை இருப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

SRI C. MUTHIAH : மீன் இலாகாவில் கூட்டுறவு ஸ்தாபனம் அமைக்க கூட்டுறவு இலாகாவுக்குப் போய் அமைக்க வேண்டி இருப்பதால் தாமதம் ஆகிறது. தொழில் இலாகாவில் கூட்டுறவு ஸ்தாபனத்தைத் தொழில் இலாகாவே நியமிப்பது போல் மீன் இலாகாவிலும் ஏற்பாடு செய்தால் வெகு சீக்கிரமாக கூட்டுறவு ஸ்தாபனத்தை அமைக்க முடியும். சாதாரணமாக இரண்டாண்டு காலம் ஆகிறது. இது பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இந்தக் கேள்வி தூத்துக்குடி தாலூகாவைப் பொறுத்தது. இப்பொழுது மீனவர் டைரக்டர் பொறுப்பைப் பற்றித்தான் பேசப்படுகிறது.

Second Five-Year Plan

* 93 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government anticipates that the Second Five-Year Plan will fall short of its original targets; and